**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.எண். 180/2022</u>**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சௌந்தர்பாண்டி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலு | வயது | 21 |
| த.பெ.(அ)க.பெ. | முருகன் | தொழில் | இல்லதரசி |
| ஊர்/பணிபுரியுமிடம் | கல்லாவூர் | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை :</u> 1ம் எதிரி அஜர், 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை**

நான் கல்லாவூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 கன்னிகா எனது மாமியார். வழக்கின் எதிரிகளை தெரியும். எங்கள் பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். கடந்த 24.12.2022 அன்று மாலை 06.00 மணிக்கு எனது மாமியார் அ.சா.1 மற்றும் எனது நாத்தனார் பிரியதர்ஷினி ஆகியோர் எங்கள் நிலத்தில் வேலை செய்துக்கொண்டிருந்த போது 1ம் எதிரி ராஜேந்திரன் எனது மாமியாரிடம் வந்து வீனாக தகராறு செய்து கத்தியால் இடது பக்க தலையின் மீதும், இடது கையின் மீதும் வெட்டிவிட்டார். அ.சா.2யும் 1ம் எதிரி தாக்கியதில் அவருக்கு உள்காயம் ஏற்பட்டது. 1ம் எதிரி போன் செய்து 2ம் எதிரி வெங்கடேசனை சம்பயிடத்திற்கு வரவழைத்தார். அவரும் வந்து அ.சா.2யை விறகால் தாக்கினார். காயம்பட்ட அ.சா.1ம் அ.சா.2 இருவரையும் ஒரு தனியார் வாகனத்தில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். நானும் அவர்களுடன் மருத்துவமனைக்கு வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்தது நிலம் என்றால் சரிதான். அந்த இடம் எனது மாமியார் கன்னிகா எதிரி ராஜேந்திரனுக்கு விற்பனை செய்த இடம் என்றால் இல்லை, அடமானம்தான் போட்டிருந்தார். அந்த அடமானத்திற்கு பிறகு எனது மாமியார் ராஜேந்திரனுக்கு கிரையமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து சென்றுருப்பேன் என்றால் 10 நிமிடம் கழித்து சென்று இருப்பேன். நான் சென்ற போது எனது மாமியாரும், எனது நாத்தனார் பிரிதர்ஷினியும் அங்கிருந்த முட்செடிகளை சுத்தம் செய்திருந்தது தெரியவந்தது என்றால் சரிதான். பிரிதர்ஷினி இந்நீதிமன்றத்தில் வந்து சாட்சி சொல்லிவிட்டு

சென்றுள்ளார் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரிதர்ஷினி சம்பவ நேரத்தில் குப்புசாமியும், சரிதா என்பவர்கள் மட்டும்தான் அங்கு இருந்தார்கள் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். இச்சம்பவம் குறித்து பிரியதர்ஷினி, கன்னிகா ஆகியோர் என்னிடம் கூறிதான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் சம்பவம் நடந்த நாள் அன்று என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எங்கு விசாரித்தார்கள் என்றால் கிராமிய காவல்நிலையத்தில் விசாரித்தார்கள். அப்போது என்னுடன் என் கணவர் முருகன், கோவிந்தராஜ் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களையும் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் எடுத்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் அது போன்ற சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியாரும், நாத்தனாரும் எதிரிகள் மீது மிளகாய் தூள் போட்டு அடித்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எங்கள் குடும்பத்தினர் மீது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் நாங்கள் அப்படி செய்யவில்லை. எனவே எங்களை அடிக்கவில்லை என்றாலும், நாங்கள்தான் எதிரிகளை தாக்கிவிட்டு அவர்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து இவ்வழக்கை பொய்யான சங்கதிகள் அடிப்படையில் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

சாட்சியின் கையொப்பம்